DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.
**IDOP.No.28 /2015**

P.W.1 ஜோசப் கென்னடி த/பெ.சூசைராஜ் நாள் – 18.12.2023

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

எதிர்மனுதாரருக்கு எதிராக அவரது நடத்தையை சந்தேகப்பட்டு , எந்தவித விசயங்களையும் மனுவில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான் . எதிர்மனுதாரர் என்னை திட்டி அவமானப்படுத்தியதாகதான் இந்த விவாகரத்து மனுவில் காரணம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . எந்த தேதியில், எந்த மாதிரி திட்டினார் என்பதை குறிப்பிட்டு மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் விவாகரத்து கோருவதற்கு போதிய காரணங்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எந்த தேதியில், யார் முன்னிலையில், எந்த இடத்தில் பஞ்சாயத்து நடந்தது என்பதை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னை மற்ற பல பெண்களுடன் தொடர்புபடுத்தி எதிர்மனுதாரர் பேசியதாக நான் சொல்லியுள்ள நிலையில், அந்த பெண்களுடைய பெயர்களை மனுவில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான் . எனக்கு அரசு வேலை கிடைத்தவுடன் எதிர்மனுதாரரையும் , குழந்தைகளையும் பணிசெய்யும் இடத்திற்கே வந்து தங்குங்கள் என்று சொன்னேனா என்றால் சாட்சி சொன்னேன், ஆனால் எதிர்மனுதாரர் புதுக்கோட்டை அல்லது ஆலங்குடியில் குடியமர்த்தவேண்டுமென்று எதிர்மனுதாரர் கேட்டார், அதற்கு நானும் சரி என்று சொன்னேன். நான் பணி கிடைத்த இடத்திற்கு எதிர்மனுதாரரையும் , குழந்தைகளையும் குடியமர்த்துவதற்கு அழைத்தேன், அதற்கு ஒப்புகொண்டேன் என்பதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் சாட்சி ஆதாரம் இல்லை என்று பதில் அளிக்கிறார். எனக்கு வேலை கிடைத்த பிறகு பணியிடத்திற்கு நான் சென்ற பிறகு பணியிடத்தை ஒட்டி வந்து என்னுடன் வீடு பார்த்து குடியிருக்க வேண்டுமென்று சொல்லி நான் எதிர்மனுதாரருக்கு வழக்குரைஞர் மூலம் அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால் அறிவிப்பு அனுப்பவில்லை , என் உறவினர் மூலமாக எதிர்மனுதாரருக்கு அதுற்றி தகவல் சொன்னேன் என்று சாட்சி பதில் அளிக்கிறார் . எந்த உறவினர் மூலமாக நான் என் மனைவிக்கு தகவல் சொல்லி, நான் பணி பார்க்கும் இடத்தை ஒட்டி குடும்பம் நடத்த வருமாறு மனுவில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சாட்சி உறவினர்கள் பெயரை

குறிப்பிட்டு சொல்லவில்லை என்று பதில் அளிக்கிறார் . நான் எந்தவொரு உறவினர் மூலமாகவும் எதிர்மனுதாரரை என்னுடன் வந்து சேர்ந்து வாழ வேண்டுமென்று கூப்பிடவில்லை என்றாலும் , அவ்வாறு உறவினர் மூலமாக கூப்பிட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல . எதிர்மனுதாரர் என்னை வெட்டி பயலே , தேவடியா பயலே என்று நடு ரோட்டில் வைத்து திட்டியதாக நான் மனுவில் குறிப்பிட்டிருப்பது வழக்கிற்காக , பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல . எதிர்மனுதாரர் படிக்கவில்லை என்பதால்தான் நான் அவருடன் வாழவிருப்பப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை பிசைக்காரர் என்று இழிவாக பேசியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல . எதிர்மனுதாரர் என்னை விட்டு பிரிந்து சென்று வாழவில்லை என்றாலும் , நான் தான் எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து சென்று வாழ்ந்து வருகிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ்வதற்கு தயாராக இருந்தார் என்றாலும் , நான் தான் எதிர்மனுதாரரை வீட்டைவிட்டு விரட்டிவிட்டேன் என்றால் சரியல்ல . எதிர்மனுதாரர் நான் என்னுடைய குழந்தைகளை பார்ப்பதற்கு அனுமதிக்கவில்லை என்றும் , புதுநன்மை சம்மந்தமாக சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றாலும், வழக்கிற்காக அவ்வாறு சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தாலியை கழட்டி வீசிவிட்டார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எந்த தேதியில் எந்த நேரத்தில் நான் சொல்வதுபோல் எதிர்மனுதாரர் தாலியை கழட்டி வீசினார் என்று என்னுடைய மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை தனிக்குடித்தனம் செல்ல வேண்டுமென்று வற்புறுத்தியதாக வழக்கிற்காக பொய்யாக மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரை என்னுடன் சேர்ந்து வாழ வரவேண்டுமென்று நான் கூப்பிட்டதாகவும் , அதற்கு எதிர்மனுதாரர் மறுத்துவிட்டதாகவும் நான் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யான சங்கதிகள் என்றால் சரியல்ல . திருமண சீர்வரிசை சாமான்கள் எங்கள் வீட்டிலேயே இருந்து வருகிறது என்றால் சாட்சி சரியல்ல, எதிர்மனுதாரர் வண்டி வைத்து சீர்வரிசை பொருட்களை எடுத்து சென்றுவிட்டார் என்று பதில் அளிக்கிறார். குறிப்பிட்டு ஒரு தேதியை சொல்லி எதிர்மனுதாரர் நான் சொல்வதுபோல் திருமண சீர்வரிசை பொருட்களை எடுத்து சென்றவிட்டார் என்று சொல்லியிருக்கிறேனா என்றால் சாட்சி தேதியை குறிப்பிட்டு சொல்லவில்லை, ஆனால் சீர்வரிசை பொருட்களை எடுத்து சென்றது குறித்து சொல்லியுள்ளேன் என்று பதில் அளிக்கிறார் . திருமண சீர்வரிசை பொருட்கள் என்னுடைய வீட்டில்தான் இருந்து வருகிறது என்றாலும் , அவற்றை

எதிர்மனுதாரர் வண்டி வைத்து எடுத்து சென்றுவிட்டார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கின்றேன் என்றால் சரியல்ல . எதிர்மனுதாரர் என்னை இருசக்கர வாகனத்தில் விரட்டிவந்து , மிரட்டியதாக நான் சொல்லியுள்ளது வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல . எதிர்மனுதாரர் என்னை இருசக்கர வாகனத்தில் விரட்டிவந்தார் என்பது தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னுடன் பணிபுரியும் சோபா என்ற ஆசிரியையை திருமணம் செய்ய வேண்டுமென்பதற்காக பொய்யான காரணங்களை சொல்லி இந்த விவாகரத்து மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . நடக்காத சம்பவங்களை நான் கற்பனையாக சொல்லி இந்த விவாகரத்து மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . குழந்தைகளின் நலன் கருதி எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ்வதற்கு எப்போது தயாராக இருந்து வருகிறார் என்றால் சரியல்ல . நான் கேட்டுள்ள விவாகரத்து பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*